தரம்- 12, 13 வணிகக்கல்வி

# SWOT பகுப்பாய்வு



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

## மேலதிக வாசிப்புக்காக

## SWOT பகுப்பாய்வு

வணிகங்கள் தமது அகச்சூழல் காரணிகளையும் புறச்சூழல் காரணிகளையும் ஆராய்வதன் மூலம் தமது பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்களை அறிந்து கொள்வதற்காக மேற்கொள்ளும் ஆய்வு இதுவாகும்.

அகச்சூழல் காரணிகளை ஆய்வு செய்வதன் மூலம் பலம், பலவீனம் என்பவற்றையும் புறச்சூழல் காரணிகளை ஆய்வு செய்வதன் மூலம் வாய்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் அறிந்து கொள்ளமுடியும்.

பலம் - Strength

பலவீனம் - Weakness

வாய்ப்பு— Opportunities

அச்சுறுத்தல் - Threats

| | |
|---|---|
| 1 | 3 |
| 2 | 4 |

பலம் Strength

பலவீனம் Weakness

வாய்ப்பு Opportunities

அச்சுறுத்தல் Threats

### 1 S & O

இது நல்ல நிலைமையாகும். அதாவது இந்நிலைமையில் குறித்த வணிக நிறுவனம் பலமானதாகவும் வாய்ப்புக்களைக் கொண்டதாகவும் இருப்பின் தாமதிக்காது அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

### 2 W & O

குறித்த நிறுவனம் வாய்ப்புக்களை கொண்டுள்ள நிலையில் பலவீனமாக இருப்பின் அந்நிறுவனம் முதலில் பலவீனத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே வாய்ப்புக்களை தேடிச்செல்ல வேண்டும்.

### 3 S & T

குறித்த வணிகம் அச்சுறுத்தல் நிறைந்த வேளையில் பலமானதாக இருப்பின் அந்நிறுவனம் முதலில் தந்திரமாக அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்தல் வேண்டும். அதன் பின்னர் சவால்களை வெல்ல வேண்டும்.

### 3 W& T

சவால்கள் நிறைந்த பலவீனமான நிலைமையாகும். குறித்த நிறுவனம் பலவீனமானதாகவும் அச்சுறுத்தல் நிறைந்ததாகவும் இருப்பின் அந்நிறுவனம் அச்சுறுத்தல்கள் நீங்கும் வரை வணிகத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.

தொகுப்பு :-

கணினி வடிவமைப்பு :- திரு.பா.சாயிரூபன், த.தொ.தொ ஆசிரியர் (வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு — 01

வணிகச் சூழலை விளங்கிக் கொள்ளல் திட்டமிடலுக்கு மிகவும் முக்கியமானதாகும். பின்வரும் கூற்றுக்களுக்கு எதிரேயுள்ள இடைவெளிகளை ஔறுமுவு மாதிரியில் காணக்கூடிய பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், சவால்கள் ஆகியவற்றுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி நிரப்புக.

1) வணிக நடவடிக்கைகளுக்காக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் திறந்து விடப்பட்டமை .......................................

2) உமது வணிகம் அமைந்துள்ள பிரதேசத்தில் புதிய வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு கூடுதலான நிறுவனங்கள் திட்டமிடுகின்றமை ....................................

3) புதிய சந்தைக்காக வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான திறன்களைக் கொண்ட ஊழியர்கள் நிறுவனத்தினுள் காணப்படாமை ...........................

4) உறுதியாகத் தாபிக்கப்பட்டுள்ள கம்பனியின் வியாபாரச் சின்னம் ..................................

## வணிக செயன்முறைகளுக்கான வெளிமூலங்கள்

வணிகச் செயற்பாடுகளின் போது குறித்த ஓர் சேவையினை ஒப்பந்த அடிப்படையில் மூன்றாந் தரப்பினர்களுக்கு வழங்கி பெற்றுக் கொள்வதே இதுவாகும். பொதுவாக சம்பளப்பட்டியல் தயாரித்தல், ஆளணிக் கருமங்கள், கணக்கீட்டுச் சேவைகள், தரவு சேகரிப்பு, வாடிக்கையாளர் சேவைகள் போன்றன இம்முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

இவ் வணிக வெளிமூலச் சேவையானது வணிகங்களுக்கு தமது செயற்பாட்டுச் செலவினை பெருமளவில் குறைத்து சிறப்பாக தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வாயாப்பாக அமைகின்றது.

உதாரணம் :

அமெரிக்காவில் இருக்கின்ற Microsoft நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடுகள் தொழில்நுட்பம் சார்ந்தவையாக இருக்கும். ஆனால் அவர்களது கணக்கீடு சார்ந்த அனைத்து தொழிற்பாடுகளும் இரண்டாம் பட்சமாகவும், தவிர்க்க முடியாததாகவும் இருக்கும். இதன் மூலம் மூன்றாம் தர நாடுகளைச் சேர்ந்த கணக்காய்வாளர் ஒருவர் மூலமாக Microsoft நிறுவனம் தனது கணக்கியல் தேவைகளை ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் நிறைவேற்றிக் கொள்கிறது.

Copyright © thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**வணிக வெளிமூலச் சேவையின் அனுகூலங்கள்**

- விரைவாகவும் வினைத்திறனாகவும் வணிகச் சேவைகளை வழங்கமுடிதல்.
- நவீன தொழில்நுட்பங்களின் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- சுதந்திரமான மற்றும் நெகிழ்வுத் தன்மையுடன் சேவைகளைப் பெறமுடியும்.
- விரைவான செம்மையான அறிக்கைகளைப் பெறமுடிதல்.
- ஊழியர் பயிற்சிக்கான வளங்களை பெருமளவில் சேகரிக்க முடிதல்.

**வணிக வெளிமூலச் சேவையின் பரதிகூலங்கள்**

- தகவல் பாதுகாப்பின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாக்கப்பட்டுள்ளமை.
- செயற்பாட்டுச் செலவுகளை குறைவாக மதிப்பீடு செய்வதற்கு வாய்ப்புள்ளது.
- சேவை வழங்குவதில் மூன்றாம் தரப்பில் தங்கியிருக்கும் நிலை தோன்றும்.
- தொடர்பாடல் பிரச்சினைகள் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதத்தினை ஏற்படுத்தலாம்.

**அமுக்க குழுக்கள்**
**Pressure Groups**

தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நேரடியான அரசியல் செல்வாக்கினைப் பெற்றிராத ஆனால் தமது நோக்கங்களை அரசியல் செயற்பாடுகளில் உட்படுத்தும் அமைப்புக்கள் அமுக்க குழுக்கள் ஆகும்.

உதாரணம் :

சூழல் பாதுகாப்புக் குழுக்கள் - கிரீன் பீஸ் (Green Peace)

நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் - நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம்

உள்ளூர் இன குழுக்கள் - கொழும்பு இந்து மன்றம், YMBA, YMMA தொழிற்சங்கங்கள்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வணிகச் சூழல் காரணிகளின் தற்போதைய போக்குகள்

1) தனிநபர்கள் தமது காலத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு கடுமையாக முயற்சி செய்கின்றனர். இதற்காக போசாக்கான உணவு, குடிபானங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.
2) ஓய்வு நேரங்களை பெருமளவில் வீடுகளில் செலவிடுதல். இதன் காரணமாக தொலைக்காட்சி, வானொலிச் சேவை, சர்வதேச நேரடி ஒலி / ஒளி பரப்புக்கள், பொது நோக்குச் சாதனங்களின் கேள்வி அதிகரித்துள்ளது.
3) உடன் உணவுகளை அதிகமாக கொள்வனவு செய்தல்.
   Eg: Take Away Foods
4) வயது முதிர்ந்தோர் தொகை சனத்தொகையில் அதிகரித்தலும் அவர்களுக்கான உற்பத்திகள் மற்றும் முதியோர் பராமரிப்பு சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையும்.
5) ஒரே நேரத்தில் பல தொழில்களில் ஈடுபடல்.
6) நுகர்வோர் தொடர்பான அறிவினைப் பெற்று நுகர்வோர் பலமானவராகக் காணப்படல்.
7) சூழல் பாதுகாப்புக்கும் சமூக தேவைகளுக்கும் முக்கியத்துவம் வழங்குதல்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk